STC.No.112/2024 PW1. திரு. சுப்புராஜ்

தேதி– 08.04.2025

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் அரசு ஊழியராக இருக்கிறேன், விவசாயமும் செய்கிறேன். என்ன அரசு பணி பார்க்கிறேன் என்றால் டாஸ்மார்க்கில் மேற்பார்வையாளராக இருக்கிறேன். எனக்கு மாத வருமானம் என்ன என்றால் ரூ.12000/– ஆகும். என்ன விவசாயம் செய்கிறேன் என்றால் வாழை விவசாயம் செய்கிறேன். வாழை விவசாயம் மூலம் வருடத்திற்கு என்ன வருமானம் கிடைக்கும் என்றால் ரூ.4,00,000/– முதல் ரூ.5,00,000/– வரை லாபம் கிடைக்கும்.

2. நான் அரசு பணியாளராக இருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன் என்றும், மேற்படி விவசாயம் மூலம் வருடத்திற்கு ரூ.4,00,000/– முதல் ரூ.5,00,000/– வரை லாபம் கிடைக்கும் என்றும் எனது சட்ட அறிவிப்பு, முறையீடு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc., B.Ed படித்துள்ளேன். நான் அரசு பணியாளராக இருப்பதால் ரூ.20000 க்கு மேற்பட்ட தொகையை வங்கி மூலமாகதான் கொடுக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. எனக்கு கொடுத்த காசோலையை எத்தனை முறை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2 முறை தாக்கல் செய்தேன். எந்தெந்த தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 01.03.2024 மற்றும் 24.05.2024 ஆகிய தேதிகளில் வசூலுக்கு தாக்கல் செய்தேன். எந்தெந்த வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் முதலில் SBI வங்கி, தேனி மற்றும் இரண்டாவது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உத்தமபாளையத்தில் வசூலுக்கு தாக்கல் செய்தேன்.

4. எதிரிக்கு எத்தனை முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 2 முறை அனுப்பினேன். நான் இரண்டு முறை சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். எந்த அறிவிப்பின் அடிப்படையில், இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2 வது முறை அனுப்பிய 27.05.2024 அறிவிப்பின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நான் இரண்டு முறை அனுப்பிய சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, நான் முதலில் அனுப்பிய அறிவிப்பிற்கு எதிரி சமரசத்திற்கு வந்து மறுபடியும் மே மாதம் 2024 ல் வசூலுக்கு தாக்கல் செய்யும்படி சொன்னதல் மறுபடியும் வசூலுக்கு தாக்கல் செய்தேன்.

5. எதிரிக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியாது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரி நண்பருடன் வந்தார், எதிரியின் நண்பர் காசோலையை பூர்த்தி செய்தார், எதிரி கையொப்பம் செய்து கொடுத்தார். எதிரி நண்பருடன் வந்து தாவா காசோலையை எதிரியின் நண்பர் பூர்த்தி செய்தார் எதிரி கையொப்பம் மட்டும் செய்த விபரத்தை எனது வழக்கில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 3 வருடங்களாக பழக்கம். எதிரியின் இல்ல, சுபதுக்க நிகழ்வில் கலந்துள்ளேனா என்றால் ஆமாம், எதிரியின் மகளுக்கு செய்த விசேசத்திற்கு நான் சின்னமனூருக்கு சென்றுள்ளேன்.

6. எதிரியின் குழந்தை பெயர் தெரியுமா என்றால் எதிரியின் மனைவி பெயர் ஈஸ்வரி, அவரது குழந்தை பெயர் பவித்ரா ஆகும். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் 8, 9 ம் வகுப்பு வரை படித்திருக்கலாம். நான் இரண்டு முறை தாவா காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான செலுத்து சீட்டினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

7. எனது சொந்த ஊர் என்னவென்றால் கன்னிசேர்வை பட்டி ஆகும். அது எந்த தாலுகா என்றால் உத்தமபாளையம் தாலுகா ஆகும். எந்த நீதிமன்றத்திற்கு உட்பட்டது என்றால் இந்த நீதிமன்றத்திற்கு உட்பட்டது. எனக்கு உத்தமபாளையத்தில் கணக்கு இருந்தும் நான் எதற்காக தேனி கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் நான் அரசு துறையில்

பணியாற்றுவதால் எனக்கு தேனியில் கணக்கு உள்ளதால் முதலில் தேனியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன்.

8. நான் அனுப்பிய சட்டஅறிவிப்பை எதிரிதான் வாங்கினார் என்று என்னால் கூறமுடியுமா என்றால் எதிரியின் முகவரிக்கு தான் அறிவிப்பு கொடுக்கப்பட்டது, அறிவிப்பினை பெற்று கொண்டதால் தான் சமரசத்திற்கு வந்தார். எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்டஅறிவிப்பினை பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம், (அவ்வாறு அஞ்சலக ஒப்புகை அட்டை நீதிமன்ற கோப்பில் தாக்கல் செய்யப்படவில்லை). நான் அஞ்சலக ஒப்புகை அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமாலேயே வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. அதனால் தான் எதிரி எந்தவித பதிலறிவிப்பு எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 01.03.2024 அன்று கடன் கொடுத்த காசோலை எண் என்னவென்றால் 000004 ஆகும். எதிரிக்கு கொடுத்தது போல் வேறு யாருக்காவது கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு இதற்கு முன்னால் ரூ.2000, ரூ.5000, ரூ.10000/- என கடன் கொடுத்துள்னோ என்றால் கடன் கொடுத்துள்ளேன், கைமாற்று கடனாக கொடுத்துள்ளேன். ரூ.2000, ரூ.5000, ரூ.10000/- என கடன் கொடுத்ததாக சொல்லும் விபரத்தை எனது முறையீடு, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் கூறவில்லை என்றால் சரிதான்.

10. நான் தாக்கல் செய்துள்ள முறையீட்டில் குறிப்பிட்டுள்ள ஆவண பட்டியலில் 2 வதாக காட்டப்பபட்டுள்ள ஆவணம் வங்கி குறிப்புரை எந்த வங்கியால் வழங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு G-pay மற்றும் போன்பே இருக்கிறா என்றால் இருக்கிறது. ஏன் G-pay மற்றும் போன்பே பணம் கொடுக்கவில்லை என்றால் கையில் ரொக்கமாக இருந்ததால் அனுப்பவில்லை. எனது வழக்கு எண் தெரியுமா என்றால் 115 என்று தெரியும், முழுமையாக தெரியாது. எதிரியின் மாமனார் மற்றும் மாமியார் பெயர் தெரியுமா என்றால் மாமனார் பெயர் சங்கரன், மாமியார் பெயர் போதுமணி.

11. எதிரிக்கும் எனக்கும் எந்த பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மாமியாருக்கும், எனக்கும் தான் பழக்க வழக்கம் என்றால் சரியல்ல. எதிரியின் பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் செய்யப்படாத காசோலையை எதிரியின் மாமியார் எனக்கு கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் எந்தவித பழக்க வழக்கமும் இல்லை என்றாலும், எதிரியின் மாமியார் எதிரியின் பூர்த்தி செய்யப்படாத காசோலையை என்னிடம் கொடுத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுப்படி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.04.08 15:52:59 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam